# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.8/2023

## அ.சா. 14 (LW 21)

| பெயர் | மணிவாசகம் | தொழில் | |
|---|---|---|---|
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 22.09.2025 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது விருவீடு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த20.06.2022 அன்று அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக நான் பணியிலிருந்த போது 19.00மணிக்கு நிலைய குற்ற எண்.132/2022 இதச பிரிவுகள் 294(b), 324, 307 மற்றும் 302 வழக்கின் முதல் தகவல் அறிக்கை துரித முதல் அறிக்கையை நீதித்துறை நடுவர் நிலக்கோட்டை நடுவர் நீதிமன்றத்திற்கு கொண்டு போய் ஒப்படைத்தேன். அதன் பின்பு நிலக்கோட்டை மாவட்ட காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் துரித முதல்தகவல் அறிக்கை ஒப்படைத்து அத்தாட்சி பெற்று நிலையம் வந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்தில் ஜெகதீசன் என்ற சிறப்பு சார்பு ஆய்வாளர் பணியில் இருந்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் ஜெகதீசன் சிறப்பு சார்பு ஆய்வாளரிடமிருந்து பெற்றதாக நீதித்துறை நடுவரால் மேலொப்பம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில் என்னிடம் முதல்தகவல் அறிக்கை ஒப்படைக்கபடவில்லை என்றும் நான் அதை

நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.22 19:43:11 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.